செய்தி வெளியீடு

**இலங்கையின் பொருளாதாரம் 2019 மூன்றாம் காலாண்டில் 2.7 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது.**

**தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2019 மூன்றாம் காலாண்டு**

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

………………………………………………………………………………………………………


இலங்கையின், 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான (ஜூலை, ஆகஸ்ட், செப்டெம்பர்) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி(மொ.உ.உ), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் இன்னும் குறிப்பாக சில சேவைத் துறை தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளில் ஏப்ரல் 21, 2019 அன்று நடைபெற்ற 'ஈஸ்டர் சண்டே தாக்குதல்' தாக்கத்தை பிரதிபலிக்கின்றன, அதன்படி, 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டோடு ஒப்பிடும்போது, இந்த காலாண்டில் கூட 'தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை நடவடிக்கைகள்' ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் மறையான தாக்கத்தை கணிசமாகக் காட்டுகின்றன.

2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதம் 2.7 சதவீதமென தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது. நடப்பு, நிலையான (2010) விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019 மூன்றாம் காலாண்டில் ரூபா 4,027,051 மில்லியன்களாகவும், ரூபா 2,507,363 மில்லியன்களாகவும் முறையே பதிவு செய்ததுடன் , 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நடப்பு, நிலையான (2010) விலையில் ரூபா 3,692,822 மில்லியன்களாகவும், ரூபா 2,441,796 மில்லியன்களாகவும் பதிவு செய்துள்ளது.

பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள், நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இக் காலாண்டில் தமது பங்களிப்பினை முறையே 6.9 சதவீதம், 26.8 சதவீதம், 60.0 சதவீதம் மற்றும் 6.2 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளன. 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், , கைத்தொழில் மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் முறையே 3.3 சதவீதம் மற்றும் 2.8 சதவீத கணிசமான நேர் வளர்ச்சி வீதங்களை முறையே பதிவு செய்துள்ளன, அதே

நேரத்தில், விவசாய நடவடிக்கைகள் 0.4 சதவீத சாதகமான நேர் வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளது (வரைபடம் 1)



வரைபடம் 1: மூன்றாம் காலாண்டில் வளர்ச்சி வீதங்களின் ஒப்பீடு (2018, 2019)

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், 2018 ஆம் மூன்றாம் காலாண்டோடு ஒப்பிடும்போது 'எண்ணைப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக' , நன்னீர் மீன்பிடி, 'தேயிலை வளர்ச்சி', 'தானியங்களின் வளர்ச்சி' என்பன 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் முறையே 13.9 சதவீதம், 10.9 சதவீதம் , 10.0 சதவீதம் மற்றும் 8.1 சதவீதம் கவனிக்கக் கூடிய நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 'காய்கறிகளின் வளர்ச்சி', 'விறகு மற்றும் காடாக்கல்',' 'பழவகைகளின் வளர்ச்சி', வேறு நிலைத்திருக்கிற பயிர்கள்' என்பன கணிசமான நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன: அவை முறையே 5.1 சதவீத, 3.6 சதவீத, 3.5 சதவீத மற்றும் 3.1 சதவீதங்களாகும். இருப்பினும், சில முக்கிய விவசாய நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும்போது இந்த காலாண்டில் மறையான வளர்ச்சி விகிதங்களை பதிவு செய்துள்ளன. அந்த துணை நடவடிக்கைகளில், 'இறப்பர் உற்பத்தி', 'தாவர பரப்புதல்', 'கடல் மீன்பிடி' , 'கால்நடை உற்பத்தி' மற்றும் 'அரிசி உற்பத்தி' ஆகியவை இந்த காலாண்டில் முறையே 19.9 சதவீதம், 13.7 சதவீதம், 8.2 சதவீதம், 6.2 சதவீதம் மற்றும் 4.3 சதவீத கணிசமான சுருக்கத்தை பதிவு செய்துள்ளன.

கைத்தொழில் துறை நடப்பு விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 26.8 சதவீத பங்களிப்பை செய்ததுடன், மேலும் 3.3 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்துள்ளது. மொத்த உற்பத்தி நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2.5 சதவீதத்தால் மேலும் விரிவடைந்திருப்பதுடன், 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி' மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி', நடவடிக்கைகள் முறையே 5.0 சதவீத, 5.1 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களால் ஆதரவளித்துள்ளன. 'ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள்', நடவடிக்கை 9.3 சதவீத குறிப்பிடத்தக்க நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்யும்

அதேவேளை ‘இரசாயன பொருட்களின் உற்பத்தி’ இந்த காலாண்டில் 1.5 சதவீத கணிசமான நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது. இருப்பினும், 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டோடு ஒப்பிடும்போது இந்த காலாண்டில் சில உற்பத்தி நடவடிக்கைகளின் செயல்திறன் சுருங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக 'காகித தயாரிப்புகளின் உற்பத்தி', 'அடிப்படை உலோகம் மற்றும் புனையப்பட்ட உலோகப் பொருட்களின் உற்பத்தி', 'பிற உற்பத்தி' மற்றும் 'தளபாட உற்பத்தி’ நடவடிக்கைகள் இந்த காலாண்டில் முறையே 8.2 சதவீதம், 7.3 சதவீதம், 6.1 சதவீதம் மற்றும் 5.3 சதவீத மறை வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் பிரிவுகளுக்கிடையில் 2.2 சதவீத மற்றும் 6.7 சதவீத அதிக பங்களிப்பை வழங்கும் ‘சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்’ மற்றும் ‘கட்டடவாக்கம்’ இந்த காலாண்டில் முறையே 5.0 சதவீதம் மற்றும் 4.6 சதவீதம் வளர்ச்சியைக் பதிவு செய்துள்ளன. மேலும், ‘மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்’, ‘நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்’ மற்றும் ‘கழிவுநீர், கழிவு சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்’ ஆகியவை இந்த காலாண்டில் 1.5 சதவீதம், 4.9 சதவீதம் மற்றும் 8.5 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60.0 சதவீத அதிக பங்களிப்பை வழங்கும் ‘சேவைகள்’ நடவடிக்கைகள், குறிப்பிடத்தக்க 2.8 சதவீத நேர் வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. சேவைத் துறையின் இந்த வளர்ச்சியின் 2.8 சதவீதம் முக்கியமாக ‘மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்’, ‘பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து’, ‘நிதி சேவைகள்’ மற்றும் ‘பிற தனிப்பட்ட சேவைகள்’ ஆகியவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்களிப்புச் சேவை நடவடிக்கைகளாக உள்ளன. அதன்படி, இந்த துணை நடவடிக்கைகள் முறையே 2.1 சதவீதம், 1.4 சதவீதம், 6.9 சதவீதம் மற்றும் 3.0 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. மேலும், 'தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள் ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்', மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கு குறைவாக இருந்தாலும் (0.2) 2018 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் வளர்ச்சி விகிதத்தில் 20.5 சதவீதத்தின் சிறந்த செயல்திறனைப் பதிவு செய்துள்ளது. மேலும் இந்த காலாண்டில் 'தொலைத்தொடர்பு' துணை செயல்பாடு கணிசமாக 11.1 சதவீதம் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ‘தங்குமிடம், உணவு மற்றும் பான சேவை நடவடிக்கைகள்’ துணை செயல்பாடு 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டோடு ஒப்பிடும்போது இந்த காலாண்டில் 7.5 சதவிகிதம் சுருங்கியிருப்பதாக அறிவித்துள்ளது, இது சுற்றுலாத் துறையில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் தொடர்ச்சியான பாதகமான தாக்கத்தைக் காட்டுகிறது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2019 ஆம் மூன்றாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

திருமதி. ஐ.ஆர். பண்டார

பணிப்பாளர் நாயகம்